

திருவாசகம் - 26
அதிசயப்பத்து கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# அதிசயப்பத்து கதை வடிவில்

# முத்தி இலக்கணம்

# திருப்பெருந்துறையில் அருளியது

**வைப்பு மாடென்றும் மாணிக்கத் தொளியென்றும் மனத்திடை**

**உருகாதே செப்பு நேர்முலை மடவிரலியர்தங்கள் திரத்திடை**

**நைவேனை ஒப்பிலாதன உவமனி லிறந்தன ஒண்மலாத்**

**திருப்பாதத்து அப்பன் ஆண்டுதன் அடியரிற்கூட்டிய அதிசயங்**

**கண்டாமே 01**

மகாலிங்கம் அருணாசலத்திற்குச் சொன்னார்; "அருணாசலம், நான் செய்யாத தீமைகள் இல்லை. நன்றாகக் குடிப்பேன். அதனால் சில குடிகாரர்களையும் என்னுடன் சேர்த்துக் கொள்வேன். ஊரில் உள்ள நல்லவர்கள் குடிகாரர்களைக் கண்டால் விலத்திச் செல்வார்களே தவிர பிரச்சினைக்கு வரமாட்டார்கள். எம்மோடு கதைக்க அவர்களுக்குப் பயம் அதனால் பேசாது ஒதுங்கிக் கொள்வர். கதிரேசண்ணையோடு யாரும் பேசமாட்டார்கள். பேசினால் சிலர் பேசுபவர்களுக்கு அடித்து விடுவார்கள். எப்போதும் நாம் தேடிய செல்வம் நிலைத்திருக்கும் என்றும், அது தான் கடவுள் என்றும் நினைத்துப் பணத்தைக் கொடுத்து எல்லாவிதமான தேவைகளையும் பூர்த்தி செய்வோம். பணத்தைக் கொடுத்தால் எதையும் இரகசியமாகச் செய்யப் பலர் இருக்கிறார்கள். சிற்றின்பமான பெண்களின் தொடர்புக்காக எவ்வளவு பணத்தைச் செலவு செய்திருப்பேன். அது தான் சொர்க்கம் என்று அந்த நரகத்தில் விழுந்து கிடந்தேன். மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னது உண்மை. அவர் எம்போன்ற தீயவர்கள் திருந்திச் சிவனை அடைதல் வேண்டும் என்பதற்காகத்தான், ''எப்போதும் செல்வம் நிலைத்திருக்கும் என்றும் அதுதான் சுயஞ்சோதிப் பொருள் என்றும் நான் சிவனை நாடவில்லை. சிற்றின்பங்களைத் தான் நாடினேன். ஆயினும் ஒப்பற்ற சிவன் என்னை ஆட்கொண்டு தனது அடியவர் கூட்டத்தோடு சேர்த்தான். இது ஓர் அதிசயமல்லவா'' என்கிறார். நான் குடித்து வெறித்து மாமிசம் உண்டு சிற்றின்பங்களை நாடியிருந்தபோது சிவனை நிந்தனை செய்தேன். பின் துன்பங்கள் பெருகச் சிவனடியாரான கதிரேசனிடம் சென்றபோது அவர் எனக்குச் சிவனை அறிமுகம் செய்து வைத்தார். முன்பு மதியாது

நிந்தனை செய்த நான் பயப்பட்டேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை. சிவனை வணங்கத் தொடங்கியதும் சிவனடியார் பலர் என்னை மதிக்க ஆரம்பித்தனர். இப்போ நான் சிவன்கோவில் சிரமதானக்குழுவின் தலைவர். அதனால் கோவிலை அடியார்களுடன் சேர்ந்து துப்பரவு செய்கிறேன். இப்போ சிவனடியார்கள் பலர் மகாலிங்கம் சிவனடியாராக மாறித் தொண்டு செய்வது ஓர் அதிசயம் என்கின்றனர். இப்போ எனது நினைவுகள் யாவும் சிவனைச் சுற்றி வருகின்றன. அதுவும் ஓர் அதிசயம் தான்'' என்றார் மகாலிங்கம்.

**நீதியாவன யாவையும் நினைக்கிலேன் நினைப்பவ**

**ரொடுங்கூடேன் ஏதமே பிறந்திறந்துழல்வேன் என்னடி**

**யானென்று பாதி மாதொடுங் கூடிய பரம்பரன் நிரந்தர மாய்**

**நின்ற ஆதி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங்**

**கண்டாமே. 02**

''அருணாசலம், நீ கவலைப்படாதை. உனது மனைவி பிள்ளைகள், உற்றார் உறவினர்கள் எல்லோரும் உன்னை வலிய வந்து சேர்த்துக் கொள்வர். என்னை வெறுத்து ஒதுக்கியவர்கள் இப்போது நான் சிவனடியாரானதும் நானில்லாமல் எந்த விடயத்தையும் செய்வதில்லை. மங்கள நிகழ்வுகளானாலும் சரி, அமங்கள நிகழ்வுகளானாலும் சரி நான் தான் அவற்றை முன்நின்று செய்ய வேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள், "தீயவர்கள் என்று நாட்டில் யாரும் இருக்கக்கூடாது எந்தத் தீயவனையும் சிவன் மன்னித்து ஏற்று உதவிகள் செய்வரென்பதை உணராதவர்க்கு வெளிப்படுத்துவதற்காகத்தான் இவ்வாறு தன்னைத் தீயவனாகவும், சிவனைப் போற்றாதவனாகவும் காட்டிக் கொள்கிறார்''

''நல்ல வழிகளைப்பற்றி நான் நினைப்பதில்லை. நினைக்கவும் நல்லவர்களோடு நான் சேரவும் இல்லை. தீயவற்றைச் செய்வதால் பிறவிப் பெருங்கடலில் மூழ்கியவன் நான். அத்தகைய என்னை நித்தியமானவனான அர்த்தநாரீசுவரன் தன்னோடும் தன் அடியார்களோடும் சேர்த்துக் கொண்டது அதிசயமானது'' என்கிறார்.

''இது எம்போன்றவர்கள் இன்பம் அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பால் சொன்னது. இப்படியே தினமும் நீ சிவனை வணங்கிவந்தால் சிவனே உனது

உறவினர்களை அழைத்து வந்து உன்னுடன் சேர்த்து வைப்பார். இது கட்டாயம் நடக்கும் என்னை நம்பு'' என்றார் மகாலிங்கம்.

**முன்னை என்னுடை வல்வினை போயிடமுக்கண**

**துடையெந்தை தன்னை யாவரும் அறிவதற் கரியவன்**

**எளியவன் அடியார்க்குப் பொன்னை வென்றதோர் புரிசடை**

**முடிதனில் இளமதியதுவைத்த அன்னை ஆண்டுதன் அடியரிற்**

**கூட்டிய அதிசயங் கண்டாமே. 03**

அப்போது ஆச்சிரமத்திலுள்ள சிவன்கோவிலுக்கு வந்த கதிரேசன் சிவனுக்கு மாலைசூட்டி வணங்கிவிட்டு அருணாசலத்தின் அருகில் வந்து; ''இப்போ உனக்குச் சிவன் என்ன சொல்கிறார்''? என்று கேட்டார்.

''நான் குடிகாரன், சிவ நிந்தனை செய்தவன், தீயவன் வணங்க ஆரம்பித்ததும் ஏதாவது சொல்வாரா…?'' எனறு கேட்டான் அருணாசலம்.

''முறையாக ஒரு கணம் வணங்கினால் சிவன் உன்னை அறிந்து கொள்வார். உனது ஊரில் உள்ள சிலர் ஆச்சிரமத்திற்கு வருவார்கள். அவர்களில் ஒருவர் உன்னை இங்கு கண்டதாகவும், நீ பயபக்தியுடன் சிவபூசை செய்வதாகவும் கூறியுள்ளார். எமது ஆச்சிரமத்தைப் பற்றி அயல் ஊரில் உள்ளவர்கள் அறிந்து வைத்துள்ளனர். உங்கள் ஊர்ப்பாடசாலை அதிபர் தனது பிள்ளைகளின் பிறந்தநாள்க் கொண்டாட்டங்களை எமது ஆச்சிரமச் சிறார்களுடன் தான் கொண்டாடுவார். அவர் சொன்னமையால் உனது வீட்டார் உன்னை நம்பிவிட்டனர். அவர் வந்து உனக்குத் தெரியாது உனது செயல்களைக் கவனித்துள்ளார்'' என்றார் கதிரேசன்.

''சிவனே, இந்தத் தீயவன் மீது நீ காட்டும் கருணை அதிசயமானது மனம் பண்படாதவர். சிவனைக் காணமாட்டார். பண்பட்டவர்களுக்கு அவன் நன்கு விளங்குகிறான். அத்தகையவன் எனது வினையைப் போக்கி என்னைத் தனது அடியாரோடு சேர்த்துக் கொண்டான்" என்கிறார். அது உண்மை. ஏனென்றால் தீமைகளைத் தவிர வேறு எதையும் செய்தறியாத என்னை ஒரு பொருட்டாக எண்ணி எமது பாடசாலை அதிபரைக் கொண்டு எனது குடும்பத்தினருக்குச் சொன்னது ஒரு அதிசயம் தானே. சிவனே, இதை நான் முன்பு உணரவில்லை'' என்று கலங்கினான் அருணாசலம்.

**பித்த னென்றெனை உலகவர் பகர்வதோர் காரணம்இதுகேளீர்**

**ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும் உபாயம தறியாமே**

**செத்துப் போய்அருநரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை**

**அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங்**

**கண்டாமே. 04**

"அருணாசலம், மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் சொன்னவை என்னைப் போன்ற தீயவர்கள் திருந்த வேண்டும் என்பதற்காகவென்று கதிரேசண்ணை சொல்வார். இப்போ "நரகத்தில் துன்பப்பட்டுக் கொண்டிருந்த என்னை சிவன் தனது திருக்கூட்டத்தோடு சேர்த்து வைத்துள்ளான். அதை நினைத்துத் திகைப்படைந்த என்னை உலகத்தவர் பித்தன்" என்கிறார். மாணிக்கவாசக சுவாமிகள் குதிரை வாங்கச் சென்றபோது திருப்பெருந்துறையில் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டார். அதற்குப் பின்புதான் திருவாசகத்தைப் பாடியவர். அவர் இளமைப்பருவத்திலேயே சிவன் மீது பக்தி கொண்டவர். அப்படியிருக்கும்போது இவ்வாறு கூறுகிறாரென்றால் அது உலக நன்மைக்காகவே கூறுகிறார் என்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தானே வேண்டும். நான் குடித்து வெறித்துத் தீயசெயல்கள் எல்லாவற்றையும் செய்து கொண்டு நரக வாழ்வு வாழ்ந்தேன். சிவனை வணங்கத் தொடங்கிய பின்பு பெரியதொரு சிவனடியார் கூட்டம் என்னோடு சேர்ந்துள்ளது. அது அதிசயம் தானே. என்னோடு சேர்ந்து குடித்த பலர் இவன் வாழத் தெரியாத விசரன் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் நான் கவலைப்படுவதில்லை. சிவன் சுந்தரரைப் பார்த்து பித்தா என்றுதானே பாடச் சொன்னவர். அந்தப் பித்தனின் அடியார்களும் பித்தர்கள் தானே" என்றான் மகாலிங்கம்.

**பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன் பன்மலர்**

**பறித்தேத்தேன் குரவு வார் குழலார் திறத்தே நின்றுகுடிகெடு**

**கின்றேனை இரவு நின்றெறி யாடிய எம்மிறை எரிசடை**

**மிளிர்கின்ற அரவன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங்**

**கண்டாமே. 05**

அப்போது அங்கே வந்த சுவாமியார் சொன்னார்; "மகனே, சிவனின் திருவிளையாடல்கள் மக்களின் நலனுக்காகவே செய்யப்படுகின்றன. சிவன் பக்தர்கள் தன்மீது வைக்கும் அன்பைக் கணிப்பானே தவிர அவர்களது தகுதி தராதரங்களை

அவன் பார்ப்பதில்லை. அதற்காகத்தான் அம்மைக்குச் சாபங்கொடுத்து மீனவர் குடும்பத்தில் பிறக்கச் செய்து பின் தான் மணந்து கொண்டவன். பக்தர்கள் கொடுக்கும் எதையும் பிரசாதமாக வாங்கி உண்பவன். அதனால்தான் கண்ணப்பர் கொடுத்த இறைச்சியை வாங்கி உண்டவன். அரசன் கோவில் கட்டச் சிவன் பூசலார் கட்டிய மனக்கோவிலில் குடியேறியவன். இதெல்லாம் சிவனுக்கு விளையாட்டு. இதை மெய்யடியார்கள் தான் உணர்ந்து கொள்வர். சிவனை வசீகரிக்க ஒரு பூ போதும். இதனால்தான் சாதாரணமான மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக மாணிக்கவாசக சுவாமிகள் தன்னை பக்தியில் மிகவும் இழிந்தவனாக நினைக்கிறார். மகாலிங்கம் பெரும் சாதிமான். அவனது சகோதரனின் மகள் ஒருவனைக் காதலித்து அவனுடன் சென்று விட்டாள் என்பதற்காகத் தனது சகோதரனின் உறவைத் துண்டித்தவன். அப்படியிருக்கக்கூடாது என்பது சிவனின் விருப்பம். அதனால் தான் சிவன் எல்லா உயிர்களிலும் கலந்து இருக்கிறார். இதை உணராதவர்கள் தான் சாதி, தகுதி, பணம் என்று பார்க்கிறார்கள். மாணிக்கவாசகர் ''நான் அடியார் கூட்டத்துடன் கூடியிருக்க-வில்லை. பூக்கொண்டு உன்னை வணங்கவில்லை. காமநோய் கொண்டவன் நான். மகாபிரளயத்தின்போது ஞான ஒளி வீசிக்கொண்டிருப்பவனும், பாம்பை அணிந்தவனுமாகிய பரமன் அத்தகைய என்னைத் தனது அடியவர்களோடு சேர்த்து வைத்தது மிகப் பெரிய அதிசயம்'' என்கிறார். உலகில் வாழும் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் தீயவற்றைச் செய்வர். அது இயல்பு. சிலர் பெரும் தீமைகளைச் செய்வர். அதனால் மக்களுக்குப் பெரும் பாதிப்புக்கள் உண்டாகும். அவர்களுக்காகத்தான் மாணிக்கவாசகர் இவ்வாறு சொல்லி அவர்களை சிவ பக்தராக்கும்படி கேட்டுக் கொள்கிறார். மது வகைகளைக் குடிக்காதவருக்கு மதுவின் தீமைகளை எடுத்துக்கூறத் தேவையில்லை. குடிப்பவனுக்குத்தான் கூற வேண்டும். அதனால்தான் தீயவர்களுக்காக மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு கூறுகிறார்" என்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**எண்ணிலேன் திருநாமவஞ் செழுத்தும்என் ஏழைமை**

**யதனாலே நண்ணிலேன் கலைஞானிகள் தம்மொடுநல்வினை**

**நயவாதே மண்ணிலே பிறந்திறந்து மண்ணாவதற் கொருப்படு**

**கின்றேனை அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய**

**அதிசயங் கண்டாமே. 06**

"சுவாமி, மாணிக்கவாசக சுவாமிகள் எம்போன்றவர்கள் திருந்திச் சிவனை அடைய வேண்டும் என்ற நல்நோக்கத்திற்காகத் தன்னை இழிவுபடுத்திக் கூறியுள்ளார்.

அவர், "நான் பஞ்சாட்சர ஜெபம் செய்யாதவன். நூல் அறிஞரோடு சேராதவன். இறைபணி செய்யாது மண்ணாங்கட்டிபோல இருப்பவன். அத்தகைய என்னை இறைவன் தன்வசமாக்கியது அதிசயம் என்கிறார். இது உண்மையா சுவாமி. அவரை அடித்த மன்னனே தனது தவறை உணர்ந்து மன்னிக்குமாறு வணங்கினவன். அப்படியிருக்கும்போது இப்படிக் கூறுவதும் அதிசயம் தான். நூல்களைப் படித்தும் இயற்றியும் நமக்கு உதவி செய்யும் அறிஞரை மாணிக்கவாசகர் மதிக்கவில்லையா…? நானும் மகாலிங்கமும் தான் அறிஞர்களை மதிக்காதவர்கள். நல்லையா ஆசிரியர் பெரும் அறிஞர். ஊர்மக்கள் அவரைத் தெய்வமாக மதிக்கின்றனர். அவரை நானும் மகாலிங்கமும் காரணமின்றிக் கேலி செய்தோம். அவர் எமக்குப் புத்திமதிகள் சொல்ல நாம் அடித்த விட்டோம். மறுகணம் ஊரவர்கள் திரண்டு வந்துவிட்டனர். நவராசாவும் சிவலிங்கமும் முரடர்கள். நாம் இருவரும் அவர்களுக்குப் பயம். இருவருக்கும் அவர்கள் அடித்த அடி அப்பப்பா அன்று நாம் தப்பியது அதிசயம். ஊரவர் எதுவும் சொல்லவில்லை. தடுக்கவும் இல்லை. இன்னும் அடிக்க வேண்டும் என்றனர். கடவுள் மாதிரி வாழும் கதிரேசன், "நவராசா இனிப்போதும் விடு. இனிமேல் இப்படியான செயலில் ஈடுபட்டால் ஊரைவிட்டுத் துரத்த வேண்டும்" என்றவர். அப்படிப்பட்ட எம்மைச் சிவன் தன்னடியவர்களாக ஏற்றுக்கொண்டு தனக்கு மாலை கட்டிப்போட அனுமதித்தது அதிசயம் தான்" என்றான் மகாலிங்கம்.

**பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய**

**பொய்க்கூரை இத்தை மெய்யெனக் கருதிநின்றிடர்க் கடற்**

**சுழித்தலைப் படுவேனை முத்து மாமணி மாணிக்க வயிரத்த**

**பவளத்தின் முழுச்சோதி அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய**

**அதிசயங் கண்டாமே. 07**

"சுவாமி, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல "இந்த அருவருக்கத்தக்க பொய்யான உடம்பை மெய்யானது என்று கருதி துன்பக்கடலில் உழல்கின்ற என்னை ஆத்மப் பிரகாசமான சிவன் தனக்குச் சொந்தமாக்கியது அதிசயம் என்கிறார். அது உண்மை சுவாமி. பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் பளபளவென்றிருந்த இந்த உடல் இப்போது சுருங்கி நரைத்துவிட்டது. நரையைப்போக்க கறுப்புமை பூசியபோதும் உடலின் சுருக்கத்தை நீக்க முடியவில்லை. தளர்ச்சியையும் போக்க முடியவில்லை. முன்பு இளைஞர்களைவிட உற்சாகமாகவும், தைரியமாகவும் இருக்கிறாய் என்று கூறிய கலையரசி பின் படுகிழவனான உன்னோடு காசுக்காகத்தான்

கூடி வாழ்கிறேன் என்று சொல்வாள். இளமையில் எத்தனை வகையான வாசனைத் திரவியங்களைத் தடவினோம். விலையுயர்ந்த பட்டாடைகளை அணிந்தோம். இப்போ நான்குமுழ வேட்டி அணிந்தாலும் அதிலொரு நிம்மதி, மகிழ்ச்சி என்பன இருக்கு. சிவலிங்கத்தின் மகன் பூரணன். அவனுக்கு இளம் வயதில் சக்கரை வியாதி வந்துவிட்டது. காலில் ஒரு பெரியபுண் வந்து மாறாது இருந்தமையால் காலை அகற்றிவிட்டனர். அவனுக்கு அருகில் செல்ல முடியாதளவு துர்நாற்றம் அவனது உடலில் இருந்து வெளிப்படுகிறது. அவன் தற்கொலை செய்யப் பலமுறை முயன்றான். இவையெல்லாம் முன்பு புரியவில்லை. இப்போது சிவனை வணங்கத் தொடங்கியபின்பு தான் புரிகிறது. எனக்கு என்மீது வெறுப்பு உண்டாகிறது" என்றான் மகாலிங்கம்.

**நீக்கி முன்னென்னைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற்**

**புகப்பெய்து நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து**

**நுகமின்றி விளாக்கைத்துத் தூக்கி முன்செய்த பொய்யறத்**

**துனளறுத் தெழுதரு சுடர்ச்சோதி ஆக்கி ஆண்டு தன் அடியரிற்**

**கூட்டிய அதிசயங் கண்டாமே. 08**

"மகாலிங்கம், சைவசமயமும், சைவத் தெய்வங்களும், ஞானிகளும், முனிவர்களும் மற்றும் நூலாசிரியர்களும், நாயன்மார்களும் மக்களின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டே செயற்பட்டனர். மக்கள் மகிழ்வாக இல்லாவிட்டால் எதையும் ஏற்கமாட்டார்கள். அதனால் மக்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கி அவர்களை இறைவனை அடையச் செய்து பேரின்பவாழ்வை உண்டாக்கிக் கொடுப்பதையே மேற்சொன்னவர்கள் கருத்திற் கொண்டனர். இதில் மாணிக்கவாசக சுவாமிகள் முன்னின்று செயற்பட்டவர். ஒரு கீழான அடிமட்டத்தில் இருக்கும் ஒருவன் எதற்கும் தான் தகுதியானவனா எனப் பயப்படுவான். அந்தப் பயத்தை அகற்றி, கீழான மனிதனை மேலானவர்களாக சிவனடியார்களுடன் இணைப்பதே மாணிக்கவாசக சுவாமிகளின் எண்ணமாக இருந்தமையால் தான் அவர் தன்னை மிகவும் கீழான பிறவியாக நினைத்துத் திருவாசகத்தைப் பாடினார். இதை யாரும் உணரவில்லை. திருவாசகத்தைத் தேன் எனப் போற்ற வேண்டும் என்கிறார்கள். ஆனால் அவற்றை உழைப்பாகவே கருதுகின்றனர். அவர் சொல்கிறார். தன்னைத் தற்காலிகமாக மாயப் பிரபஞ்சதிற்குட்படுத்தி அதில் வைத்துப் பக்குவப்படுத்தி உபதேசிக்க வேண்டியவற்றையெல்லாம் உபதேசித்துத் தன் சொரூபத்தில் இறைவன் சேர்த்துக் கொண்டான்" என்கிறார். இதன் மூலம் ஏழை எளியவர்கள், தகுதியில்லாதவர்கள், சாதியில் குறைந்தவர்களெல்லாம்

சிவன் தன்னுடன் அணைத்துக் கொள்வான். மாறாத பக்தி கொண்ட யாரும் சிவனோடு மகிழ்வாக உறவாடலாம். அதற்கு எதுவும் தடையாக மாட்டாது. அதை மீறித் தடையேற்பட்டால் அதைச் சிவன் நீக்குவான்" என்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுந்தரு நாற்றம்**

**போல் பற்றலாவ தோர் நிலையிலாப் பரம்பொருள் அப்பொருள்**

**பாராதே பெற்றவா பெற்ற பயனது நுகர்த்திடும் பித்தர்சொல்**

**தெளியாமே அந்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங்**

**கண்டாமே. 09**

"மகாலிங்கம், நிறைந்த வாசனையை உண்டுபண்ணுவதற்குப் பூக்கள் இருப்பது போன்று மனிதன் உடல் எடுத்திருப்பது சிவனை வணங்குவதற்கேயாகும். உலகவாழ்க்கையைப் பெரிதாக எண்ணி அதன்மூலம் பெறும் சிற்றின்பத்தை விரும்பிப் பித்துப் பிடித்தவர்கள் இன்ப துன்பத்தில் உழன்று உடல் வாழ்க்கையை வீணாக்குகின்றனர். இறைவன் என்னை அப்படியானவர்களின் போக்கில் இருந்து விடுவித்து ஆட்கொண்டது வியப்பானது என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். இல்லறம் துறவறத்திலும் ஆயிரம் மடங்கு சிறந்தது. இல்வாழ்வான் தான் எல்லோரது கடமைகளையும் செய்ய இறைவனால் படைக்கப்பட்டவன். ஏழைகள், சிவனடியார்கள் இல்வாழ்வானையே நம்பி வாழ்கின்றனர். இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்பவனைச் சிவன் மிகவும் விரும்புவார். இல்லறவாழ்வின் மூலம் சமூகத்திற்கு நல்லவற்றைச் செய்யும் மக்களைப் பெற வேண்டும். தருமகாரியங்களைச் செய்ய வேண்டும். இதைவிட்டுவிட்டு வியாபார நோக்குடன் செயற்படக்கூடாது. இது தான் மாணிக்கவாசக சுவாமிகளது எண்ணமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**இருள்திணிந்தெழுந்திட்டதோர் வல்வினைச்**

**சிறுகுடிலிதுவித்தைப் பொருளெனக்களித் தருநரகத்திடை**

**விழப்புகுகின்றேனைத் தெருளும் மும்மதில் நொடிவரை**

**யிடிதரச் சினப்பதத் தொடுசெந்தீ அருளும் மெய்ந்நெறி**

**பொய்ந்நெறி நீக்கிய அதிசயங்**

**கண்டாமே. 10**

அக்ஞானத்தில் உதித்த வலிய வினையின் விளைவுதான் இவ்வுடல் இதைப் பொருளென நான் மதித்தது பொய்நெறி. ஏனென்றால் நரகத்தின் வாசல் இவ்வுடம்புதான். முப்புரங்களை ஒரு நொடியில் சம்மாரம் செய்த சிவன் தம்மை அடைவதற்கு உற்ற மெய்நெறியைக் காட்டியது அதிசயமாகும்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இந்த உடலும் இந்த உடலில் உள்ள அவயங்களும் நன்னெறியை உணர வேண்டும். இல்லாவிட்டால் தீமையே மேலோங்கும். மனம் நல்லவற்றை நாடாது. பஞ்சமாபாதங்களைச் செய்யக்கூடாது என்று படிக்கிறோம். அதனால் வரும் தீமைகளையும் அறிந்து வைத்திருக்கிறோம். தீயசெயல்களைச் செய்வோர் பெறும் தண்டனைகளையும் காண்கிறோம். ஆனால் அவற்றைத் தானே செய்கிறோம். அண்மையில் ஒரு சம்பவம் நடந்தது உங்களுக்குத் தெரியும். வசதியான குடும்பத்தைச் சேர்ந்த மிகவும் பெரிய அறிவாளி ஒருவர் தன்னுடன் மதிப்புக் காரணமாகப் பழகும் கன்னிப் பெண் தன்மீது காமங் கொண்டுள்ளாள் என்று நினைத்து அவளுடன் தவறாக நடக்க முற்பட்டபோது அவள் தைரியமாக எதிர்த்தமையால் அவரது குடும்ப மானம் போய்விட்டது. ஆசை அணுவாகத் தோன்றி ஆகாயமளவு வளரக்கூடியது. அதைக்கட்டுப்படுத்த இறைவழிபாடு உதவும். அதனால் தான் அடிக்கடி மாணிக்கவாசக சுவாமிகள் காம ஆசைகொண்டு தறிகெட்டலையும் மனதைக் கட்டுப்படுத்து என்று சிவனை வேண்டுகிறார். காம ஆசையுள்ள தன்னை ஆட்கொண்டமை அதிசயம் என்கிறார். மனம் எப்போதும் தீயவற்றையே நாடும். ஏனென்றால் தீயவைதான் மனதிற்கு இன்பத்தைக் கொடுக்கும். அதனால் தீயவற்றை நாடும் மனதைச் சிவவழிபாட்டின் மூலம்தான் கட்டுப்படுத்த முடியும். இதைக் கற்றவர்கள் பலர் உணர்வதில்லை. காம ஆசை என்பதற்கடுத்தது பொருளாசை. அதுவும் மனிதனை ஆட்டிப் படைக்கும் தன்மை கொண்டது. அதனால்தான் மாணிக்கவாசக சுவாமிகள் அக்ஞானத்தில் உதித்த இவ்வுடல் நரகத்திற்குச் செல்வதற்கான நுழைவாயிலாக இருக்கிறது என்று கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.